**05.11.2025.** CC. 44/2007 PW. 8. திருமதி. தனலெட்சுமி

**கடந்த 20.08.2025 ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருக்கும் நிலையில் இந்நீதிமன்ற M.P. No. 13/2025, dated 03.09.2025 ன் படி கு.வி.மு.ச 1973 பிரிவு 311 ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் இன்று மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை : 4 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். 1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மையானது கு.வி.மு.ச பிரிவு 317(1)ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. இதற்கு முன்னர் நான் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த சங்கதிகள் எனக்கு ஞாபகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கின் கோப்புகள் அனைத்தையும் நான் படித்துப்பார்த்துள்ளேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 ஆன புகார் மனுவில் மேற்படி புகார் மனுக்கொடுக்க ஏன் காலதாமதமானது என்ற சங்கதிகள் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

2. இந்த வழக்கில் பட்டியல் சாட்சி ஸ்ரீ கலா, மருத்துவரையும் மற்றும் உதவி ஆய்வாளர் கிளைமன்சியாளை தவிர்த்து மற்ற பட்டியல் சாட்சிகளை விசாரித்து இந்த வழக்கின் புலன்விசாரணை அதிகாரி மறு வாக்குமூலம் எதுவும் பதிவுச் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கின் வாதிக்கு முழு சிகிட்சை அளித்த மருத்துவரை வழக்கில் சாட்சியாக சேர்ந்து வாக்குமூலம் எதுவும் பதிவுச் செய்யப்பட்டுள்ளதா என்றால் அதற்கான மருத்துவ ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3. மேற்படி மருத்துவ சிகிட்சை குறித்த முழுமையான ஆவணங்களை இவ்வழக்கில் புலன்விசாரணை அதிகாரி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் X-ray தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

4. இந்த வழக்கின் புலன்விசாரணை அதிகாரி முறைப்படி புலன்விசாரணை செய்யாமல் இருந்த வழக்காவணங்களை வைத்து அதன் அடிப்படையில் உண்மைக்கு மாறான ஒரு குற்ற இறுதி அறிக்கையை நடைபெறாத சம்பவத்ததை சங்கதிகளாக சேர்த்து புகார்தாரர் தரப்பில் உள்ள குறைகளை மறைத்து அவருக்கு ஆதரவாக குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை மையப்படுத்தி இந்த உண்மைக்கு மாறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், மேற்படி புகார்தாரருக்கு அவர் புகாரில் கூறப்பட்டுள்ளது போல் குடும்ப ரீதியான வன்முறைகளும், வரதட்சணை தொடர்பான சங்கதிகளும் நடைபெறவில்லை என்றாலும், எந்தவித காயங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்றாலும், புகார்தாரரின் சகோதரர் ராஜசேகர் என்பவரின் தூண்டுதலின் பேரில் புகார்தாரர் உண்மைக்கு மாறான புகாரை கொடுத்துள்ளார் என்றாலும் மேற்படி புகார்தாரர்

தனக்கு ஏற்பட்டதாக சொல்லும் பாதிப்பு உண்மையிலேயே நடைபெறவில்லை என்றாலும், குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் எந்த குற்றமும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.